# தலைவாசல் Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 19 | thalaivaasaltv@gmail.com | வெள்ளிக்கிழமை ஒக்ரோபர் 16, 2020


## நீர்வேலியில் மோட்டார் குண்டு மீட்பு

நீர்வேலிப் பகுதியில் வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டு விசேட அதிரடிப்படையினரால் நேற்று வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

03



# ‘800’ எதற்கு?

## முத்தையா முரளிதரன் தன்னிலை விளக்கம்

விஜய் சேதுபதி நடிப்பில் உருவாகும் 800 படத்திற்கு எதிர்ப்புகள் அதிகரித்து வரும் நிலையில் முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான முத்தையா முரளிதரனின் வாழ்க்கையை மையப்படுத்தி ‘800’ என்கிற படம் உருவாகவுள்ளது. ஸ்ரீபதி ரங்கசாமி இயக்கும் இந்த படத்தில் முத்தையா முரளிதரனாக விஜய் சேதுபதி நடிக்கிறார். இதற்கான அறிவிப்பு வெளியானதில் இருந்தே இப்படத்திற்கான எதிர்ப்பும் அதிகரித்தது.

இந்நிலையில் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் திடீர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில், இது நாள் வரை என் வாழ்க்கையில் பல சர்ச்சைகளை கடந்தே வந்துள்ளேன் அது விளையாட்டானாலும் சரி தனிப்பட்ட வாழ்க்கையானாலும்

03

# 20ஐ எப்படி எதிர்கொள்வது?

## தமிழ்த் தேசியக் கட்சிகள் நாளை ஒன்றுகூடுகின்றன

திலீபனின் நினைவேந்தலுடன் இணைந்து செயற்படும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கான கூட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நாளை சனிக்கிழமை காலை நடைபெறவிருக்கின்றது. இதற்கான அழைப்பை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா விடுத்திருக்கின்றார்.

“தற்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் 20 ஆவது திருத்தம், புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பவற்றுடன் எதிர்காலத்தில் இணைந்து செயற்படுவதற்கான வேலைத் திட்டங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆராயப்படும்” என மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

“ஏற்கனவே நாம் சந்தித்துப் பேசியிருக்கின்றோம். ஒரு உண்ணாவிரதப் போராட்டம், ஹர்த்தால் என்பவற்றை இணைந்து நடத்தியிருக்கின்றோம். இந்த நிலையில் அடுத்த கட்டச் செயற்பாடுகளையிட்டு நாம் ஆராய வேண்டியிருக்கின்றது. குறிப்பாக 20 ஆவது திருத்தச் சட்டம், புதிய

03



## யாழ் நகர மத்தியில் கைக்குண்டுடன் ஒருவர் கைது


யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்னால் மோட்டார் சைக்கிள் திருடுவதற்கு முயன்ற ஒருவரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து யாழ்ப்பாண போலீசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

03

## இன்றும் 110 பேருக்கு கொரோனா தொற்று

இலங்கையில் இன்று முற்பகல் வரை 61 பேருக்கும் பிற்பகலில் 49 பேருக்கும் என இன்று 110 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மினுவங்கொடை தொழிற்சாலை ஊழியர்களுடன் நெருங்கிப் பழகிய 58 பேருக்கும் மற்றும் தனிமைப்படுத்தல்



03

## ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட ஊடகவியலாளருக்கு கொரோனா?




2020 ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி அன்று காலை 9.30 க்கு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஊடகவியலாளர் ஒருவர் கொவிட் - 19 வைரஸ் தொற்றுக்கு உள்ளானதாக சந்தேகிக்கப்படுவதாகவும் அது தொடர்பில் தொடர்ந்தும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் சுகாதாரப் பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் நாலக கலுவெவ இன்று ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட அனைத்து ஊடகவியலாளர்களின் தகவல்கள் அரசாங்க தகவல் திணைக்களத்தினால் தற்பொழுது

03

# “மக்களைத் திசைத்திருப்பவே ரிஷாட்டின் கைது வேட்டை”

## வேலுகுமார் எம்.பி சாடல்



தமது இயலாமையையும் தோல்வியையும் மூடிமறைத்து மக்களை திசை திருப்புவதற்காகவே, ரிஷாட் பதியுதீனுக்கு எதிரான கைது வேட்டையை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக, ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

அரசியல் பழிவாங்கலை அடிப்படையாகக்கொண்ட அரச கட்டமைப்பின் இந்த அணுகுமுறைகளை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வேலுகுமார் எம்.பி., இன்று (16.10.2020) விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

“நாட்டை மீட்டெடுக்கப்போவதாகவும் புது யுகத்தை நோக்கி பயணிப்பதற்கான அபிவிருத்திப் புரட்சியை ஏற்படுத்தப் போவதாகவும் கூறி ஆட்சிக்குவந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ

03

## ஊடகவியலாளர்களை தாக்கியவர்களின் பிணை விண்ணப்பம் நிராகரிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தினை சேர்ந்த சண்முகம் தவசீலன், கணபதிப்பிள்ளை குமணன் ஆகிய இரண்டு ஊடகவியலாளர்களும் சட்டவிரோத மரக்கடத்தல் தொடர்பில் செய்தி அறிக்கையிடுவதற்காக செய்தி சேகரிப்பிற்கு சென்றிருந்த வேளை மரக்கடத்தலில் ஈடுபட்டுவரும் கும்பல் ஒன்றினால் கடந்த 12 ஆம் திகதி தாக்கப்பட்டிருந்தார்கள்.

இந்த சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்களை முல்லைத்தீவு பொலீசார் கைதுசெய்துள்ள நிலையில் இது தொடர்பான வழக்கு விசாரணை



இன்று (16.10.2020) முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றின் நீதிபதி கௌரவ எஸ்.லெனின்குமார் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

மிக நீண்ட நேரம் இடம்பெற்ற இந்த

03

# பிரதமரைச் சந்தித்தார் இந்திய தூதுவர்



இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று (15) மாலை இந்த சந்திப்பு இடம்பெற்றதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்போது இந்திய அரசாங்கத்தால் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்படும் பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் எதிர்காலத்தில் இந்தியாவின் ஒத்துழைப்புடன் இலங்கையில் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ள பல செயற்றிட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த மாதம் இரு நாட்டு பிரதமர்களுக்கும் இடையில் காணொளி மூலம் இடம் பெற்ற கலந்துரையாடலின் முன்னேற்றம் குறித்து ஆராய்வதே இந்த கலந்துரையாடலின் முக்கிய நோக்கமாக அமைந்திருந்தாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன் போது அனைவருக்கும் சுத்தமான குடிநீரை பெற்றுக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கோபால் பாக்லேக்கு எடுத்து கூறியுள்ளார்.

பாடசாலைகளின் நீர் தேவை, சுகாதார படிமுறைகளின் அவசியம், மழை நீரை சேமிப்பது மற்றும் கழிவுகளை பசளையாக்குதல் உள்ளிட்ட இரு நாடுகளுடனும் தொடர்புடைய பல விடயங்கள் குறித்து இந்திய தூதுவர் பிரதமருடன் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இலங்கையில் உலர் வலய கிராமங்களில் வாழும் மக்கள் குடிநீருக்காக பாரிய கஸ்டங்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டிய பிரதமர் இந்த பிரச்சினை குறித்து அதிக கவனம் செலுத்துமாறும் கேட்டுள்ளார்.

# பல்கலைக்கழகங்களில் PCR பரிசோதனைகள்!




பல்கலைக்கழகங்களில் PCR பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளரினால் எழுத்து மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கோரிக்கை தொடர்பில், அனைத்து பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்க ளுக்கும் அறிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனைவரும் அதற்கு இணக்கம் தெரி வித்துள்ளதாகவும் பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேரா சிரியர் சம்பத் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய ஸ்ரீஜயவர்தனபுர, கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல் கலைக்கழகங்களில் PCR பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் தெரி வித்துள்ளார்.

# மதில் இடிந்து விழுந்து அரியாலையில் ஒருவர் பலி



சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அரி யாலை பகுதியைச் சேர்ந்த நபர் உயிரி ழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், அரியாலைப் பகுதியில் நீண்ட காலமாக சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வு இடம்பெற்று வந்த நிலையில் இன்று (16) அதிகாலை 4.30 மணி அளவில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட அரியாலை பகுதியைச் சேர்ந்த ஒருவரே மதில் இடிந்து விழுந்து உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட் டுள்ளது.

சம்பவம் குறித்த விசாரணைகளை யாழ். பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.

# கண்டியில் லிப்ட் உடைந்து வீழ்ந்ததில் இருவர் பலி



கண்டி, லெவல்ல பகுதியில் இன்று முற்பகல் தற்காலிக மின் உயர்த்தி உடைந்து விழுந்ததில் இருவர் பலியாகியுள்ளனர்.

குறிப்பிட்ட அளவை விடவும் அதிகமான கட்டுமானப் பொருட்களை ஏற்றிச்சென்றதாலேயே இவ்வாறு உடைந்து விழுந்துள்ளது.

இதனையடுத்து ஒருவர் சம்பவ இடத்திலும் மற்றையவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலும் உயிரிழந்துள்ளனர்.

55 மற்றும் 57 வயதுகளுடைய இருவரே இவ்வாறு பலியாகியுள்ளனர்.

# ரியாஜின் மனுவை நிராகரியுங்கள்

## அருட்தந்தை ரீட் மனு தாக்கல்

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் மீண்டும் கைது செய் யப்படுவதை தடுத்து உத்தரவிடக்கோரி பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியூதீனின் சகோதரன் ரியாஜ் பதியூதீன் தாக்கல் செய்த ரீட் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது நிராகரிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இடையீட்டு மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மெல்கம் கர்தினால் ரஞ்ஜித் ஆண்டகை சார்பில் செத் சரண நிறுவனத்தின் பணிப்பாளர் லோரன்ஸ் ரமநாயக்க அருட்தந்தை இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இடையீட்டு மனுவொன்றை தாக்கல் செய்துள்ள லோரன்ஸ் ரமநாயக்க அருட்தந்தை, உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ரியாஜ் பதியூதீன் என்ற சந்தேக நபருக்கு எதிராக போதுமான சாட்சிகள் முன் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரால் அண்மையில் தெரி விக்கப்பட்டிருந்தாக கூறினார்.

இப்படியிருக்கையில் அவரை விடு விக்க குற்றப்புலனாய்வு திணைக் களம் நடவடிக்கை எடுத்திருப்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, தாம் மீண்டும் கைது செய்யப்படுவதை எதிர்த்து ரியாஜ் பதியுதீன் தாக்கல் செய்த ரீட் மனுவை இந்த மாதம் 20 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மனுதார் சார்பில் மன்றில் முன் னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா, குறித்த மனு அவசர தேவை கருதி தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தால் அதனை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

அதன்படி குறித்த மனுவை இந்த மாதம் 20 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப் பட்டுள்ளது.

# கொரோனா வைரஸ் இன்னும் சமூகப் பரவலாக மாறவில்லை

இலங்கையில் கொரோனா வைரஸானது இன்னும் சமூகப் பரவலாக மாறவில்லை என சுகாதார அமைச்சு மீண்டும் வலி யுறுத்தியுள்ளது.

மினுவங்கொடை கொவிட்-19 கொத்த ணிப் பரவலைத் தொடர்ந்து, கொரோனா பரவலானது சமூகப் பரவலாக மாறியுள்ளதாக கூறப்படுவது அறிவியல்பூர்வமாக இன்னும் நிரூபிக்கப்படவில்லை என்றும் அமைச்சின் ஊடகப் பேச்சாளர் டாக்டர் ஜெயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.

எனவே எந்தவொரு ஆபத்தும் இல்லாமல் கொத்தணி பரவலை முடிவுக்கு கொண்டு வருவதில் சுகாதார அதிகாரிகள் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்றும் பரவலைக் கட் டுப்படுத்த பொதுமக்களும் அதிகாரிகளுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

# கேகாலை மாவட்டத்தில் 13 பேருக்கு கொரோனா

கேகாலை மாவட்டத்தில் 13 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளதாகவும் 756 பேர் தனிமைபடுத் தப்பட்டுள்ளனர் என்றும் கேகாலை மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் குமார் விக்கரமசிங்க தெரிவித்தார்.

கேகாலை மாவட்டத்தின் கொவிட் 19 தொற்று ஒழிப்பு குழுவின் ஒருங்கி ணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன் தினம் (14), கேகாலை மாவட்டச் செயல கத்தின் கேட்போர் கூடத்தில் நடை பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், கேகாலை மாவட்டத்தில் 13 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் மற்றும் இம்மாவட்டத்தில் வீடுகளில் வாழும் 530 பேரும் பின்னவல பிரெண்ட்டெக்ஷ் ஆடை தொழிற்சாலையை சேர்ந்த 26 பேரும் உட்பட மொத்தம் 756 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ‘800’ எதற்கு?...

சரி, தற்போது எனது வாழ்க்கை வரலாற்று படமான திரைப்படத்தை சுற்றி பல்வேறு சர்ச்சைகள் விவாதங்கள் எழுந்துள்ள நிலையில் அதற்கான சில விளக்கங்களை கூற விரும்புகிறேன். என்னை பற்றிய திரைப்படம் எடுக்க நினைப்பதாக கூறி தயாரிப்பு நிறுவனம் என்னை அணுகியபோது முதலில் தயங்கினேன்.

பிறகு முத்தையா முரளிதரனாக நான் படைத்த சாதனைகள் என்னுடைய தனிப்பட்ட சாதனைகள் மட்டும் இல்லையென்பதாலும் இதற்கு பின்னால் எனது பெற்றோர்கள் என்னை வழிநடத்திய ஆசிரியர், எனது பயிற்சியாளர்கள் சக வீரர்கள் என பலராலும் உரு வாக்கப்பட்டவன் என்பதாலும் அதற்கு காரணமான வர்களுக்கு ஒரு அங்கீகாரம் கிடைக்கும் என நினைத்துதான் இந்த திரைப்படத்தை உருவாக்க சம்மதித்தேன்.

இலங்கையில் தேயிலைத் தோட்ட கூலியாளர்களாக எங்கள் குடும்பம் தங்களது வாழ்க்கை பயணத்தை ஆரம்பித்தது. முப்பது வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற போரில் முதலாவதாக பாதிக்கப்பட்டது இந்திய வம்சாவழியான மலையக தமிழர்கள் தான். இலங்கை மண்ணில் எழுபதுகள் முதல் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட கலவரங்கள் முதற்கொண்டு, ஜே வி பி போராட்டத்தில் நடந்த வன்முறை, பின்னர் நடந்த தொடர் குண்டு வெடிப்புகள் என எனக்கு நினைவு தெரிந்த நாள் முதலே தொடர்ந்து கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறோம்.

என் ஏழு வயதில் எனது தந்தை வெட்டப்பட்டார், என் சொந்தங்களில் பலர் பலியாகினர், வாழ்வாதாரத்தை இழந்து பல முறை நடுத்தெருவில் நின்றிருக்கிறோம். ஆதலால் போர் நிகழும் இழப்பு அதனால் ஏற்படும் வலி என்ன என்பது எனக்கும் தெரியும். முப்பது வருடங்களுக்கு மேல் போர் சூழ்நிலையில் இருந்த நாடு இலங்கை. அதன் மத்தியிலேயேதான் எங்கள் வாழ்க்கை பயணம் நடைபெற்றது. இந்த சூழ்நிலையில் இருந்து எப்படி நான் கிரிக்கெட் அணியில் இடம்பெற்று சாதித்தேன் என்பது பற்றியான படம் தான் 800.

இது இப்போது பல்வேறு காரணங்களுக்குக்காக அரசியலாக்கி எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது. அதற்கு காரணம் நான் பேசிய சில கருத்துகள் தவறாக திரித்து சொல்லப்பட்டதால் வந்த விளைவு தான். உதாரணமாக நான் 2009 ஆம் ஆண்டு தான் என் வாழ்க்கையில் மிக மகிழ்ச்சியான நாள் என்று 2019-ல் கூறியதை தமிழர் களை கொன்று குவித்த நாள்தான் முத்தையா முரளிதரன் வாழ்க்கையில் மகிழ்ச்சியான நாள் என திரித்து எழுதுகிறார்கள்.

ஒரு சராசரி குடிமகனாக சிந்தித்துப் பாருங்கள் போர் சூழ்நிலையிலேயே இருந்த ஒரு நாட்டில் எங்கு எது நடக்கும் என்பது தெரியாது, என் பள்ளிகாலத்தில் என்னுடன் பள்ளியில் ஒன்றாக விளையாடிய மாணவன் மறு நாள் உயிருடன் இருக்க மாட்டார். வீட்டை விட்டு வெளியே சென்றவர்கள் வீடு திரும்பினால்தான் நிஜம். இப்படி பட்ட சூழ்நிலையில் போர் முடிவுற்றது ஒரு சராசரி மனிதனாக பாதுகாப்பாக உணர்வது மட்டுமல்லாமல் போர் நிறைவடைந்ததால் கடந்த பத்து வருடங்களாக இரண்டு பக்கமும் உயிரிழப்புகள் ஏதும் இல்லாமல் இருப்பதை மனதில் வைத்தே 2009 ஆம் ஆண்டு எனது வாழ்க்கையில் மகிழ்ச்சியான நாள் என்கிற கருத்தினைத் தெரிவித்தேன். ஒரு போதும் நான் அப்பாவி மக்களின் படுகொலைகளை ஆதரிக்கவும் இல்லை ஆதரிக்கவும் மாட்டேன்.

என்னை பொறுத்த வரையில் சிங்களர்களாக இருந்தாலும் மலையக தமிழர்களாக இருந்தாலும் ஈழத்தமிழர்களாக இருந்தாலும் அனைவரையும் ஒன்றா கவே பார்க்கிறேன். ஒரு மலையக தமிழன் நான் என் மலையக மக்களுக்கு செய்த உதவிகளை காட்டிலும் ஈழமக்களுக்கு செய்த உதவிகளே அதிகம். நான் இலங்கை அணியில் இடம்பெற்று சாதனை படைத்த காரணத்தினாலேயே என் மீது ஒரு தவறான பார்வை இருந்து வருகிறது. நான் இந்தியாவில் பிறந்து இருந்தால் நான் இந்திய அணியில் இடம்பெற முயற்சித்திருப்பேன். இலங்கை தமிழனாக பிறந்தது எனது தவறா?

இவை அனைத்தும் விடுத்து சிலர் அறியாமையாலும் சிலர் அரசியல் காரணத்திற்காகவும் என்னை தமிழ் இனத்திற்கு எதிரானவர் என்பது போல் சித்தரிப்பது வேதனையளிக்கிறது.

எவ்வளவு விளக்கமளித்தாலும் எதிர்ப்பாளர்கள் யாரையும் சமாதானப்படுத்த முடியாது என்றாலும் என்னைப் பற்றி ஒரு பக்கம் தவறான செய்திகள் மட்டுமே பகிரப்பட்டு வரும் நிலையில் நடுநிலையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் இவ்விளக்கத்தை அளிக்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ஊடகவியலாளர்களை...

வழக்கு விசாரணையில் சந்தேக நபர்கள் சார்பாக சிரேஸ்ட சட்ட தரணிகளான சிலர் முன்னிலையாகி வாதங்களை முன்வைத்தனர் . குறிப்பாக இது இரண்டு நபர்கள் மீது மேற்கொள்ள பட்டுள்ள தாக்குதல் சம்பவம் எனவும் குறித்த ஊடகவியலாளர் ஒருவரின் சகோதரன் மீதான வழக்கு தொடர்பில் பழிவாங்கும் நோக்குடன் செய்தி சேகரிப்பதற்காக இரண்டு ஊடகர்களும் சந்தேக நபர்களின் இடத்துக்கு சென்ற நேரம் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் அத்துமீறி சந்தேக நபர்களின் வளவுக்குள் நுழைந்து செய்தி சேகரிப்பில் ஈடுபட்டார்கள் எனவும் செய்தியாளர்கள் என அறிந்திருக்காத நிலையில் தாக்குதல் மேற்கொள்ளபட்டுள்ளதாகவும் எனவே கைது செய்யப்பட்டுள்ள இரண்டு சந்தேக நபர்களையும் பிணைவழங்கி விடுதலை செய்யவேண்டும் என பிரதிவாதிகள் சார்பில் ஆயஜரான சிரேஷ்ட சட்டதரணிகளால் வாதங்கள் முன்வைக்கபட்டது.

இந்த நிலையில் மனுதாரர்களான பாதிக்கபட்டுள்ள ஊடகவியலாளர்கள் சார்பில் ஆஜரான சட்டதரணிகள் குழாம் தமது தரப்பு வாதங்களையும் மன்றுக்கு எடுத்துரைத்தனர் குறிப்பாக இந்த இரண்டு ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவம் சமூகத்தில் ஒரு கொதி நிலையை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இந்த வழக்கு விவகாரம் பொது நல விவகாரம் எனவே தனிப்பட்ட விவகாரங்களோடு இதை இணைத்து பார்க்க முடியாது அதற்க்கு எமது எதிர்ப்பினை தெரிவிக்கின்றோம். குறிப்பாக பொதுமக்களால் இந்த வழக்கு விசாரணைகள் கூர்ந்து கவனிக்க பட்டு வருகின்றது. இரண்டு ஊடகவியலாளர்களும் புலனாய்வு அறிக்கையிடலுக்காக பல நாட்களாக இந்த விவகாரம் தொடர்பில் செய்திகளை சேகரித்து வந்தவர்கள் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் இந்த செய்தியில் கவனமெடுத்து முல்லைத்தீவில் கேள்விக்குளாக்கப்பட்டுவரும் வனவளம் தொடர்பில் செய்தியை அறிக்கையிட சென்ற சமயமே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் இலங்கையில் பல ஊடக அமைப்புகள் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. சரவதேச ஊடக அமைப்புகள் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. இலங்கையின் சட்டவாக்க துறையின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதிக்கும் மகஜர்கள் அனுப்பி வைக்கபட்டுள்ளது . எனவே இந்த விவகாரம் ஊடக சுதந்திரத்துக்கு எதிராக விடுக்கப்பட்டுள்ள பாரிய சவால். இந்த இளம் ஊடகவியலாளர்கள் இருவரும் கடந்த ஆறுவருடங்களாக இந்த மாவட்டத்தில் பல்வேறுபட்ட மனித உரிமை சார் பிரச்சினைகளை செய்திகளாக வெளியிட்டு வருபவர்கள் இந்த மாவட்டத்தின் பல்வேறு சுற்றுசூழல் சார்ந்த செய்திகளை தேசிய அளவிலும் சர்வதேச வெளிகொண்டுவந்தவர்கள் எனவே இந்த வழக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது சந்தேக நபர்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் இன்னும் இரண்டுபேர் கைது செய்யப்படவில்லை எனவே பிணை வழங்க ஆட்சேபனை தெரிவிக்கின்றோம். பிணை கிடைத்தால் சந்தேக நபர்களால் சாட்சியாளர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் மற்றும் சந்தேக நபர்கள் வழக்கிலிருந்து தப்பி செல்ல நேரிடும் எனவே பிணை வழங்கும் விண்ணப்பத்தை நிராகரிக்கின்றோம் தமது வாதத்தினை கௌரவ மன்றில் முன்வைத்தனர் .

பொலிஸ் தரப்பிலும் பிணை வழங்கும் விண்ணப் பத்துக்கான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளதோடு பிணை வழங்கினால் சந்தேக நபர்களால் கைது செய்யப்படவேண்டிய ஏனைய இரண்டு பேரையும் கைது செய்ய தடைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது எனவும் சந்தேக நபர்கள் தமது காணிக்குள் ஊடகவியலாளர்கள் இருவரும் அத்துமீறி நுழைந்தார்கள் என சொன்னால் உடனடியாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தியிருக்க வேண்டும் அல்லது அவசர பொலிஸ் தொலைபேசி இலக்கமான 119 க்கு ஆவது அழைப்பெடுத்து கூறியிருக்கவேண்டும் ஆனால் மாறாக தாக்குதல் மேற்கொண்டிருக்கின்றார்கள். எனவே பிணை வழங்க பொலிஸ் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கின்றோம் என தெரிவித்தனர்.

அனைத்து தரப்பு வாதங்களையும் செவிமடுத்த கௌரவ நீதிபதி இரண்டு ஊடகவியலாளர்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரபலமான ஊடகவியலாளர்கள் எனற அடிப்படையிலும் சந்தேக நபர்கள் பிணையில் வந்தால் சாட்சிகள் அச்சுறுத்த படுவார்கள் என்றும் கைது செய்ய படவேண்டிய ஏனைய இரண்டு சந்தேக நபர்களும் தப்புவதற்காக வாய்ப்புகள் உண்டென கருதுவதாலும் பிணை விண்ணப்பத்தை கௌரவ மன்று நிராகரிக்கின்றது. அத்தோடு விளக்கமறியலில் இருக்கும் இரண்டு சந்தேக நபர்களினதும் விளக்கமறியலை எதிர்வரும் 20.10 வரை நீடித்து அன்றைய நாளுக்கு வழக்கை ஒத்திவைத்து கௌரவ மன்று கட்டளை பிறப்பித்தது.

பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் சார்பில் சட்டத்தரணிகளான எஸ்.தனஞ்சயன்,பார்த்தீபன்,ருஜிக்கா ,துஸ்யந்தி ஆகிய சட்டவாளர்கள் சமூக நலனின் அடிப்படையில் தாமாக முன்வந்து நீதிமன்றில் முன்னிலையாகி தமது வாதங்களை முன்வைத்தனர். பாதிக்க பட்ட ஊடகவியலார்களின் சார்பில் ஆஜரான சட்ட தரணிகளின் வாதத்தால் சந்தேக நபர்கள் சார்பில் முன்வைக்கபட்ட பிணை விண்ணப்பம் கௌரவ மன்றினால் நிராகரிக்கப்பட்டு சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிக்கபட்டுள்ளது.

## நீர்வேலியில்...

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு ஏற்பட்ட நீர்வேலி ஜே208 கிராம அலுவலர் பிரிவில் தோட்டக்காணி ஒன்றை துப்பரவுசெய்யும் போது குறித்த குண்டு காணப்பட்டதை யடுத்து உரிமையாளர் கோப்பாய் பொலிசாருக்கு அறிவித்துள்ளார்.

கோப்பாய் பொலிஸார் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் குறித்த குண்டை மீட்டுள்ளனர்.

## 20ஐ எப்படி...

அரசியலமைப்பு உருவாக்கம் என்பன குறித்து மற்றைய கட்சிகளின் கருத்துக்களை அறிய வேண்டியுள்ளது.

அதனைவிட தமிழ் மக்களுடைய உரித்துக்கள், அதற்கான என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து ஆராய்ந்து நாம் சில முடிவுகளை எடுக்க வேண்டி யிருக்கின்றது. ஒன்றாக இணைந்து செயற்படக் கூடிய இந்த சந்தர்ப்பத்தில் அடுத்த கட்டமாக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையிட்டு நாளைய சந்திப்பில் முக்கியமாக ஆராயவுள்ளோம்” எனவும் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

## “மக்களைத் திசை திருப்பவே...

தலைமையிலான அரசாங்கம், பல மாதங்கள் கடந்தும் பெரிதாக ஒன்றையும் செய்யவில்லை. நல்லாட்சியால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களுக்கு திறப்பு விழாக்களை மாத்திரமே நடத்திவருகின்றது” என்றுச் சாடியுள்ளார்.

“அதுமட்டுமல்ல மக்களுக்காக பல சேவைகளை முன்னெடுக்க வேண்டிய நெருக்கடியானச் சூழ்நிலையிலும் அவை தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தாமல், 20 ஐ தலையில் தூக்கிவைத்து - அதனை நிறைவேற்றுவதற்கு போராடிக்கொண்டிருக்கிறது அரசாங்கம். அதாவது ஜனநாயகம் பற்றி பேசப்படும் இந்த நவீன யுகத்தில், மீண்டும் சர்வாதிகாரத்துக்கு உயிர் கொடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன - என்றார்.

## ஊடக சந்திப்பில்...

சம்பந்தப்பட்ட சுகாதார பிரிவினருக்கு அறிவிக் கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக, தேவையேற்பட்டால், சம்பந்தப்பட்ட சுகாதார ஆலோசனை மற்றும் வழிகாட்டல் சுகாதாரப் பிரிவினால் இந்த உடகவியலாளர்களுக்கு விரைவாக அறிவிக்கப்படும்.

இருப்பினும், வைரஸ் தொற்றுக்குள்ளானவர் என சந்தேகிக்கப்படும் ஊடகவியலாளர் தொடர்பில் தொடர்ந் தும் மேற்கொள்ளப்படும் சுகாதார பரிசோதனையின் பெறுபேறு கிடைக்கும் வரையில் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அனைத்து ஊடகவிய லாளர்களும் வெளி சமூக தொடர்புகளை தவித்துக்கொள்ளல் வேண்டும்.

பாதுகாப்பாக வீடுகளில் இருக்குமாறு ஆலோசனை வழங்கி சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு எமக்கு அறிவித்துள்ளது. இது தொடர்பாக உங்களது நிறுவனத்தில் சம்பந்தப்பட்ட ஊடகயிலாளர்களுக்கு தெளிவுபடுத்துமாறு இதன் மூலம் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இதற்கு நீங்கள் வழங்கும் ஒத்துழைப்பு மிகவும் வரவேற்கத்தக்கது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றும் 110 பேருக்கு...

நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்ட 3 பேருக் கும் இவ்வாறு கொரோனா தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளதாக முற்பகல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இன்று பிற்பகல் மினுவங்கொடை தொழிற்சாலை ஊழியர்களுடன் நெருங்கிப் பழகிய 14 பேருக்கும் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்ட 35 பேருக்கும் இவ்வாறு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதன்படி, மினுவங்கொடை கொரோனா கொத்த ணியில் இதுவரை பதிவான கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 1,899 ஆக அதிகரித்துள்ளது.

## யாழ். நகர...

குறித்த நபரை பொலீசார் சோதனையிட்டபோது அவரிடமிருந்து வெடிக்கக்கூடிய நிலையிலிருந்த கைக்குண்டுஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

பொன்னகர் முறிகண்டி யைவசிப்பிடமாக கொண்ட 22 வயதுடைய இளைஞனே கைக்குண்டுடன் யாழ்ப்பாண போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் மோட்டார் சைக்கிள்களை திருடுவதற்காக வே யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்ததாகவும் திருட்டில் ஈடுபடும் போது கைக்குண்டினை காட்டி மிரட்டி திருட்டில் ஈடுபட்டு வருவதாகவும் ஏற்கனவே யாழ் மாவட்டத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்களை திருடியதாக கைது செய்யப்பட்ட நபர் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிவித்துள்ளார்.

திருடிய மோட்டார் சைக்கிள்களில் ஒரு மோட்டார் சைக்கிள் யாழ்ப்பாணபொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது கைது செய்யப்பட்ட நபர் விசாரணைகளின்பின்னர் நீதவானிடம் முற்படுத்தப்படவுள்ளார்.

# எமது உறவுகள் வெளிநாட்டில் உள்ளனர் என்றால் தொடர்புகளை ஏற்படுத்தித் தாருங்கள்

எமது உறவுகள் வெளிநாட்டில் உள்ளனர் என்றால் தொடர்புகளை ஏற்படுத்தி தாருங்கள் என அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி தம்பிராசா செல்வராணி தெரிவித்தார்.

இன்று கல்முனை பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த கருத்தை முன்வைத்தார் மேலும் தெரிவிக்கையில்.

ஹெகலிய ரம்புக்கல அண்மையில் ஒரு கருத்தினை முன்வைத்திருந்தார் காணாமல் ஆக்கப்பட்டோர் அனைவரும் வெளிநாட்டில் வாழ்கின்றனர் என்று கூறியிருந்தார். அவ்வாறு அவர்கள் வெளிநாடு சென்றிருந்தால் சிறிலங்கா விமான நிலையத்தினூடாக சென்றிருக்க வேண்டும். இவ்வாறு சென்றால் இலங்கை அரசுக்கு தெரியாமல் எதுவும் நடைபெற்றிருக்காது.

அப்படியானால் அரசு சொல்லட்டும் யார் யாருக்கு கடவு சீட்டு கடவுச்சீட்டு கொடுத்திருக்கின்றார்கள். அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி தந்தால் நாங்கள் தேட வேண்டிய



அவசியம் இல்லை. இப்படியான அப்பட்டமான பொய்களை சொல்லி எமது போராட்டத்தை இலங்கை அரசு கொச்சைபடுத்த முனைகிறது.

எமது தேடல் தொடங்கி 11வருடம் ஆகின்றது. எமது உறவுகளை தேடும் நேரத்தில் புலனாய்வு பிரிவினர்,பொலிஸாரின் கெடு பிடிகளுக்கு மத்தியில் தொடரும் போராட்டம் எமக்கான நீதி கிடைக்கும் வரை தொடரும் இலங்கை அரசு உண்மையை கூறியே ஆக வேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிய போராட்டத்தில் 78 உறவுகளை இழந்தும் எமது போராட்டம் தொடர்கின்றது .

எமது போராட்டத்தில் பக்க பலமாய் ஊடகவியலாளர்கள் தவசீலன், குமணன் ஆகியோர் தாக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் தாக்கப்பட்டதை அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாகவும் எட்டு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாகவும் வன்மையாக கண்டிப்பதோடு இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் போராட்டத்தை முன்னெடுக்கவும் நாங்கள் தயாராக இருக்கின்றோம் என சுட்டிக்காட்டினார்.

ஊடக சந்திப்பில் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் செயலாளர் கே. புவனேஸ்வரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## அவிசாவளையில் கைக்குண்டுடன் தம்பதியினர் கைது!

அவிசாவளை - மானியங்கம பகுதியல் கைக்குண்டொன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் தம்பதியினரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த உந்துருளி ஒன்றை சோதனைக்கு உட்படுத்தியபோதே குறித்த கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அவிசாவளை பகுதியில் வசித்து வரும் 38 மற்றும் 28 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## பி.சி.ஆர் சோதனை மேற்கொள்ளும்போது வலி ஏற்படுமா?


பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளும்போது அதிக வேதனையளிக்கும் என தெரிவிக்கப்படும் கருத்துக்கள் பொய்யானவை என சுகாதார அமைச்சின் ஊடக பேச்சாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலகில் பல மில்லியன் பேர் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அது வேதனைக்குரிய விடயம் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சரியாக அறிந்துகொள்ள தானும் பி.சி.ஆர் பரிசோதனைசெய்துகொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறிய அளவில் அசௌகரியம் ஏற்பட்டாலும் அது பயப்பட வேண்டிய விடயம் ஒன்று இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



## சபரிமலை ஐயப்பன் கோவில் நடை திறக்கப்படுகிறது

ஐப்பசி மாத பூஜைகளுக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை திறக்கப்படவுள்ள நிலையில் 250 பக்தர்கள் மட்டுமே சாமி தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தேவஸ்தானம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில், 'தந்திரி கண்டரரு ராஜீவரு முன்னிலையில் மேல்சாந்தி சுதிர் நம்பூதிரி நடையை திறந்து வைப்பார். அன்றைய தினம் மற்ற பூஜைகள் நடைபெறாது.

17ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு நிர்மால்ய தரிசனம், கணபதி ஹோமம், நெய்யபிஷேகம் உள்பட வழக்கமான பூஜைகள் நடைபெறும். இந்த பூஜை வருகிற 21ஆம் திகதி வரை நடைபெறும்.

தினமும் 250 பேர் மட்டுமே சாமி தரிசனத்திற்கு அனுமதிக்க படுவார்கள். அவர்கள் தரிசனத்திற்கு 48 மணி நேரத்திற்கு முன்னதாக பெறப்பட்ட கொரோனா இல்லை என்பதற்கான சான்றிதழை கொண்டுவர வேண்டும். நிலக்கல்லில் கொரோனா பரிசோதனை நடத்தப்படும்.

பம்பையில் பக்தர்கள் குளிக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது. ஆனால் பக்தர்கள் குளிப்பதற்கு சிறப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு அனுமதி இல்லை' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனா சிகிச்சை வைத்தியசாலையில் இரவு இசை நிகழ்ச்சி

மாலபே நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையில் தற்போதைய நிலையில் 324 கொரோனா தொற்றாளர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களின் மனநிலையை கருத்தில் கொண்டு வைத்தியசாலை நிர்வாகத்தினால் நேற்று (16) இரவு இசை நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டுள்ளது.


குறித்த இசை நிகழ்ச்சியில் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை, கொவிட் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மாலபே நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையின் 3 மாடி கட்டிடம் ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

குறித்த மூன்று மாடிக் கட்டிடத்தில் 550 கட்டில்கள் காணப்படுகின்றன. கொவிட் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக கடந்த தினம் மாலபே நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையை பயன்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் கொவிட் 19: அரசாங்கத்தைப் பிடித்திருக்கும் நோய் 'கொவிட் 20'

நாட்டை பிடித்திருக்கும் நோய் 'கொவிட்- 19' ஆனால், 20ஆவது திருத்தத்தை வைத்துக்கொண்டு தள்ளாடும் அரசாங்கத்தை பிடித்திருக்கும் நோய் 'கொவிட்- 20' என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "அரசின் உள்ளே இப்போது 20ஆவது திருத்தம் தொடர்பில் பெரும் கலகம் நடைபெறுகிறது. எதிரணியில் நாம் இதை எதிர்ப்பதை போன்று அரசுக்குள் இருந்து பலர் எதிர்குரல் எழுப்ப தொடங்கி விட்டார்கள்.

அமைச்சர்கள் விதுர விக்கிரமநாயக்க, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச ஆகியோர் அதிருப்தி அடைந்துள்ளார்கள். ஜனாதிபதிக்கு நெருக்கமான விதமாக நாடாளுமன்ற உறுப்பினர் கேவிந்து குமாரதுங்க எதிர்க்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ இப்போது இரண்டாவது முறை 20ஆவது தொடர்பில் ஜனாதிபதிக்கு 'காதல்' கடிதம் எழுதியுள்ளார். இதற்கு பதில் இல்லை. அது ஒருதலைப்பட்ச காதல் போலிருக்கிறது.

அரசுக்கு ஆதரவு அளித்த பல தேரர்கள், சமூக தலைவர்கள் எதிர்குரல் எழுப்புகிறார்கள். இதுதான் இன்று அரசை பிடித்துள்ள கொவிட்- 20 நோயாகும்.

இதை மறைக்கவே இன்று இந்த அரசு, வழமைபோல் இனவாதத்தை கையில் எடுத்துள்ளது. அதனாலேயே நண்பர் ரிசாட் பதியுதீன் மீது கைது முயற்சி நடைபெறுகிறது.

அவரை கைது செய்துவிட்டு, நாட்டில் 'ரிசாட் கைது' என செய்தி தலைப்பை உருவாக்க அரசு முயல்கிறது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.